**மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி**

**(தன்னாட்சி)**

**பசுமலை, மதுரை 04.**

**நடத்தும்**

**பன்னாட்டுக்கருத்தரங்கம்**

# “தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சூழல்கள்”

நிகழிடம் மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,

(தன்னாட்சி) பசுமலை, மதுரை 04.

நாள் : 30.01.2024

## கருத்தரங்கப் புரவலர்கள்

**பொறியாளர் எஸ். இராஜகோபால்,** தலைவர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

**திரு. மூ. விஜயராகவன்,** செயலர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

**திரு. ஏ. ஆழ்வார் சாமி,** பொருளாளர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை

## கருத்தரங்கத் தலைவர்

**முனைவர் அ.இராமசுப்பையா,** முதல்வர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

## கருத்தரங்க ஆலோசகர்

**பேரா.ச.பிரபு,** இயக்குநர் (பொ),
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

## கருத்தரங்க அமைப்பாளர்

**முனைவர் தி. பரிமளா,**
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு)
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

## கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர் தி.பரிமளா**

**முனைவர் நா.இரஞ்சித்குமார்**

## கருத்தரங்க உறுப்பினர் குழு

**முனைவர் இரா.கவிதா, திருமதி. ச.ரிஸ்வானா பர்வீன், திரு. சி.செந்தில்குமார், முனைவர் ச.ஜெயஸ்ரீ, முனைவர் மோ.கிருத்திகா, முனைவர் க.குமரகுருபரன், திருமதி. மா. நாகலெட்சுமி, திரு.இரா.முத்துராஜா, திரு.பூ.ஜோதிமுருகன், முனைவர் து.சிவசித்ரா, முனைவர் கூ.கருப்பசாமி, முனைவர்இரா.அழகர்சாமி, திரு.க.பெரிய கருப்பன், திருமதி. மா.கயல்விழி, முனைவர். அ.தேன்மொழி, முனைவர்.சே.முனியசாமி, முனைவர்.ச.நாகராணி**

**மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)**

வணக்கம்… மதுரை மாநகரில் கல்விப்பணியில் தலைசிறந்து விளங்கும் எங்களது பெருமைமிகு மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி தேசியத் தரமதிப்பீட்டுக் குழுவினரால் ‘A‘ தகுதிபெற்றுச் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரி தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத்தினரால் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டு 18 ஆம் நாள் நிறுவப்பட்டது. பொருளாதாரம் மற்றும் கல்வியில் பின்தங்கிய ஏழை, எளிய மாணவர்கள், கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இக்கல்லூரி தொடங்கப்பட்டது. கிராமப்புற ஏழை மாணவர்கள் காலை உணவு உண்ணாமல் வருவதை அறிந்து எங்களது நிறுவனத்தினர் மாணவர்களுக்கான கட்டணமில்லா காலைஉணவுத்திட்டத்தை தொடங்கியுள்ளனர். இரண்டு ஆண்டுகளாக நாள்தோறும் 200 மாணவர்களுக்கு காலை உணவினை **“அமைதி உணவு”** (Silent Meals) என்ற திட்டத்தின் கீழ் எங்கள் கல்லூரி செயல்படுத்தி வருகின்றது. நான்காயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயிலும் அறிவாலயமாக எங்களது கல்லூரி திகழ்ந்து வருகின்றது. இக்கல்லூரியின் ஆட்சிக்குழு உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட அறக்கட்டளையின் சார்பாக, ஒவ்வொரு ஆண்டும் அனைத்து துறைகளிலும் கருத்தரங்கம், கண்காட்சி, நாடகம் மற்றும் கலை சார்ந்த பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய பெருமை வாய்ந்த மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவானது, தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கிய மேன்மையை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் பல்வேறு பொருண்மைகளில் பயிற்சிப்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

அந்த வகையில் தற்பொழுது **“தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சூழல்”** என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சங்கஇலக்கிய காலம் தொட்டு தற்பொழுதுவரை தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் தமிழர் வாழ்வியலை விளக்குவதாக அமைகின்றது. மக்களின் வாழ்வியல், பண்பாடு, கலாச்சாரம்,

பழக்கவழக்கம், சமூகம், கிராமிய வழக்காறுகள், நாட்டுப்புறக் கதைகள் மட்டுமல்லாமல் இன்றைய நகரமயமாக்கல், தனிமனித உணர்வுச்சிக்கல்கள், வாழ்வியல் மாற்றங்கள், என அனைத்தையும் உள்ளடக்கியதாக, இன்றைய வாழ்வியல் சிக்கல்களை இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. இவைகளை சங்கஇலக்கியம் முதல் தற்பொழுதுவரை உள்ள இலக்கண, இலக்கியங்கள், கவிதை, சிறுகதை, புதினம், நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள், வட்டார வழக்குகள், பழமொழிகள், ஹைக்கூ கவிதைகள், சென்ரியூஹ் கவிதைகளாகவும் படைக்கப்படுகின்றன. படைப்பாளர்களின் எண்ணங்கள் சமூகத்தைச் சென்றடைவதற்கு அவர்களது படைப்புகளின் மீதான ஆய்வுகள் சமுதாயத்திற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். ஆய்வாளர்கள் தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சூழல்களை விளக்கும் விதமாகவும் மேலும் இது தொடர்பான ஏனையத் தலைப்புகளிலும் ஆய்வுக் கட்டுரைகள் வழங்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**கட்டுரையாளர் கவனத்திற்கு**

அனைத்துத்துறை சார்ந்த கல்லூரி பேராசிரியர்கள், தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், முதுகலை மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் அனைவரிடமிருந்தும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

ஆய்வுக்கட்டுரையைச் சொற்கோப்பில் (word document) A4 தாளில் 1.15 இடைவெளியுடன் ஏரியல் யுனிகோடு (Arial Unicode) எழுத்துருவில் 5 பக்கங்களுக்கு மிகாமல் கணினி வழித் தட்டச்சு செய்து namagalpblcns@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு **10.01.2024** ஆம் தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். ஆய்வு தன்னளவில் முழுமையானதாக சொந்த முயற்சியில் உருவான, புதிய மற்றும் உண்மைத் துணிவாக இருத்தல் வேண்டும். ஆய்வுக்கட்டுரை ஆய்வுமுறைப்படி அடிக்குறிப்பு மற்றும் துணைநூற்பட்டியல் இடம் பெற்றிருக்க வேண்டும். கட்டுரைகளை திருத்தம் செய்யவோ, பக்க வரையறை கருதி குறைக்கவோ, பதிப்பாசிரியர் குழுவிற்கு முழு அதிகாரம் உண்டு.

கருத்தரங்க நாளன்று ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுக் கட்டுரையின் சாரத்தைக் கருத்தரங்க அமர்வில் பதிவுசெய்யலாம். **“தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சூழல்கள்”** என்ற தலைப்பில் நூலாக்கம் பெற்று (ISBN எண்ணுடன்) கருத்தரங்க (30.01.2024 செவ்வாய்) நாளன்று ஆய்வுக்கோவையாக வெளியிடப்படும்.

கட்டுரையாளர்கள் தங்களின் ஆய்வுக் கட்டுரையின் வெளியீட்டுக் கட்டண விவரம் இந்தியா - வெளிநாடு

**ஆய்வாளர்களுக்கு ரூ.500 - $25**

**பேராசிரியர்களுக்கு ரூ.600 - $25**

கட்டுரைகளை மின்னஞ்சலில் அனுப்பும் பொழுதே ஆய்வுக்கட்டுரையின் வெளியீட்டுக் கட்டணத்தை வங்கிக் கணக்கில் செலுத்த வேண்டும்.

கருத்தரங்கில் பங்கேற்க இயலாதவர்கள் தங்களின் நூல் மற்றும் சான்றிதழினை அஞ்சல் வழி பெற்றுக்கொள்வதற்கு ஆய்வுக்கட்டுரையின் வெளியீட்டுக் கட்டணத்துடன் ரூபாய் 100 சேர்த்து செலுத்தவேண்டும்.

**கட்டுரைக்கான கட்டணம் செலுத்த வேண்டிய வங்கி விபரம்**

**T.PARIMALA**
Head of the Department,
Mannar Thirumalai Naicker College, Madurai.625 004
**GPay - 9788155981** Account No : 1346131000328, Bank : Canara Branch : Thirunagar, IFSC CODE - CNR0001346, MICR CODE – 625015011.

**குறிப்பு** – கட்டுரையாளர்கள் தங்கள் கட்டுரையின் தலைப்பின்மேல் தங்களின் பெயர்,பதவி, முகவரி, கைபேசி எண், புகைப்படம் ஆகியவற்றை கண்டிப்பான முறையில் பதிவு செய்திருக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட கட்டுரையாளரின் புலன எண் (WhatsApp Group) புலனக்குழுவில் சேர்க்கப்படும். புலனக்குழுவில் சேர்க்கப்படும் கட்டுரையாளர்களின் கட்டுரை மட்டுமே நூலாக்கத்தில் இடம் பெறும்.

தகவலுக்கு

**முனைவர் தி.பரிமளா – 9788155981**
**முனைவர்நா.இரஞ்சித்குமார்**
**8778636205**